FORTITER IN RE

தமிழ் இலக்கிய மன்றம்
ஞானி
வாழிய செந்தமிழ்
புனித சில்வெஸ்ரர் கல்லூரி

# புனித சில்வெஸ்ரர் கல்லூரி
## கண்டி

# கலைஞானி ‘22

## தமிழ் இலக்கிய மன்றம்
09.11.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RS

# RANI STORES




No.50, Kathireshan Street, Colombo-13

jp33517@gmail.com

0112 338392 / 0112 338720 / 0776 017502


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞானி '22

THE TAMIL LITERARY ASSOCIATION
OF
ST.SYLVESTER'S COLLEGE KANDY

requests the presence of
Rev./ Mr./ Ms.

---

For the

# Kalai Vizha '22

UNDER THE DISTINGUISHED PATRONAGE
OF

*The Principal*
**T.P.G.L. Thennakoon**

*The Chief Guest*
**Mr.R. Maheswaran**
( The Librarian of University of Peradeniya )
( Vice President of OBA )

*Guest of Honour*
**Mr.M.P. Wickneshwaran**
( Asst. Director of Education )
( Provincial Department of Education )

*Guest of Honour*
**Mr.S. Malarselvan**
( Former Municipal Council Member )

NOVEMBER | WED 09th | 2022

FROM 9:30 A.M ONWARDS
AT THE SCHOOL AUDITORIUM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

(1) அதிதிகளை வரவேற்றல் -
(2) மங்கள விளக்கேற்றல் -
(3) கல்லூரி கீதம்
(4) தமிழ்த்தாய் வாழ்த்து
(5) மன்றத் தலைவர் வரவேற்புரை
(6) கணனி வரைகலை
(7) தீப நடனம் - தரம் 8, 9
(8) குழுப்பாடல் - தரம் 10,11
(9) பரிசளிப்பு 01 தரம் (1,2,3) திரு.S.மலர்ச்செல்வன்
உதவி. திருமதி புஷ்பராணி
(10) குழுநடனம் - ஆரம்பப்பிரிவு
(11) குழுப்பாடல் - தரம் 9,10
(12) பரிசளிப்பு 02 தரம் (4,5,6,7) திரு M.P. விக்னேஷ்வரன்
உதவி. திருமதி.K.P.தர்ஷினி
(13) சிறப்பு அதிதி உரை
(14) குழு நடனம்- ஆரம்பப் பிரிவு
(15) குழுப்பாடல் - தரம் (8,10,11)
(16) பரிசளிப்பு 03 தரம் (7,8,9,10) அதிபர் திரு.T.P.G.D. தென்னகோன்
உதவி திருமதி. K. கங்காதரன்
(17) அதிபர் உரை
(18) குழு நடனம் - தரம் (6-9)
(19) குழு நடனம்
(20) பரிசளிப்பு 04 தரம் 11,12,13 பிரதம அதிதி திரு. R.மகேஸ்வரன்
உதவி. திரு.K.ஆனந்தவேல்
(21) பிரதம அதிதி உரை
(22) கலைஞானி சஞ்சிகை வெளியீடு
(23) நினைவுச் சின்னம் வழங்கல்
(24) கலை விழாக் குழு நிகழ்சசி
(25) நன்றியுரை
(26) தேசியகீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதமமெனத் திகழ் பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல்திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
அத்திலகவாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த
பெருந்தமிழணங்கே தமிழணங்கே
உன் சீரிளமை திறம் வியந்து செயல்மறந்து
வாழ்த்ததுமே வாழ்த்ததுமே

பல்வுயிரும் பல்வுலகும் படைத்தளித்துத்துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளந்துளுவும்
உன் உதரத்தே உதித்தே ஒன்று பலவாகியிடினும்
ஆரியம் போல் உலகவழக்கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே
வாழ்த்துதுமே வாழ்த்துதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைபினுந் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் வாழ்த்துச் ஆசியுரை



நான் கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இன்றைய நிலை கண்டு பூரிப்படைகின்றேன். இக் கல்லூரி தமிழ் மொழி மூலம். கற்கும் மாணவர்கள் வருடாந்தம் நடாத்தும் கலைவிழாவில் பிரதம அதிதியாக கலந்துக் கொள்வதில் பழைய மாணவன் என்ற வகையிலும் கல்லூரியின் கனிஷ்ட தமிழ் இலக்கிய மன்ற பொருளாளர் (1976) சிரேஷ்ட தமிழ் இலக்கிய மன்ற செயலாளர் (1980) என்ற வகையிலும் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எமது தமிழ் மொழிமூல மாணவர்கள் எவ்வகையிலும சளைத்தவர்கலல்ல என்பதை பல வழிகளிலும் நிருபித்து வருகின்றனர். கிரிக்கெட் அணி தலைவராக, பேண்ட் வாத்தியக் குழு தலைவராக குத்துச்சண்டை, உதைப்பந்தாட்ட, ஹொக்கி வீரர்களாக மிளிர்கிறார்கள். தமிழ் மொழி மூல பழைய மாணவர்களும் மிகச் சிறந்த நிலையில், மருத்துவ, பொறியியல், வர்த்தக மற்றும் ஏனைய துறை நிபுணர்களாக, அமைச்சர்களாக மிளிர்கின்றனர். இதற்கு இக்கல்லூரியின் தமிழ் மொழி மூலம் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் அர்ப்பணிப்பே காரணமாகும்.

தமிழ் இலக்கிய மன்ற மாணவர்கள் மாவட்ட, மாகாண தேசிய ரீதியிலான பல்வேறுபட்ட தமிழ் மொழி போட்டிகளிலும் நிகழ்வுகளிலும் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இவற்றில் பங்கு பற்றும் மாணவர்களும் வழிகாட்டும் ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்களாக உள்ளனர். 82 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள எமது கல்லூரியின் தமிழ், சமய, சமூகப்பணிகள் பாராட்டுக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

உலகில் தற்போது பேசப்படும் தொன்மையான மொழிகளில் தமிழ் மொழியானது முதன்மையானதாக அறிஞர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. உலகில் உள்ள ஆராயிரம் மொழிகளில் மூவாயிரம் மொழிகள் இன்னும் பேசப்பட்டு வருவதோடு இதில் அறுநூறு மொழிகள் உயிரோட்டம் உள்ள மொழிகளாக விளங்குகின்றது. இதில் ஏழு மொழிகள் (லத்தீன், கிரேக்கம், தமிழ், சமஸ்கிருதம், எபிரய(இஸ்ரேல்), அரபு, சீன மொழி) செம்மொழி அந்தஸ்த்து பெற்றுள்ளன. அதில் தமிழ் மொழியும் ஒன்றாகும். மொழியின் தனித்துவம், அதன் வரலாறு, சிறப்பு, அதன் பண்பு, ஆகியவற்றைக் கொண்டு 2004 ஆம் ஆண்டு தமிழ்மொழி செம்மொழியாக பிரகடணப்படுத்தப்பட்டுள்ளது. எமது மொழிக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டு வரலாறு உண்டு. ஆரம்ப காலத்தில் முதல், இடை, கடைச் சங்களால் வளர்க்கப்பட்ட எமது தாய்மொழியானது பின்னர் சேர, சோழ, பாண்டியர் போன்ற தமிழ் மன்னர்களாலும் சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், சமணம் போன்ற மதங்களாலும் ஊட்டம் பெற்றது. இவ்வாறான ஜீவ மொழியாக தமிழ்மொழி இன்றும் உலகெங்கிலும் வியாபித்து வாழும் புலம்பெயர் தமிழ் மக்களால் மேலும் வளர்க்கப்பட்டு வருகின்றது. இத் தமிழ் மொழி எமது கல்லூரியாலும் போஷிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, மேடையேற்றப்பட்டு, தமிழ் அன்னைக்கு இந்த விழா எடுப்பதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

“தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்.” அதற்கேற்ப முத்தமிழ்க் கூறுகளான இயல், இசை, நாடகம் வாயிலாக தமிழ் மொழியினை மேம்பாடடையச் செய்வது நம் அனைவரதும் தலையாய கடமையாகும். எனவே எமது மொழி, பண்பாடு, வளர்ச்சிக்கு நம் கல்லூரியின் உயரிய பண்பாக எடுக்கும் விழாவாக இன்றைய கலைவிழாவை நான் காண்கின்றேன். இவ் விழா மூலம் கலை, கலாசார பண்பாட்டு நிகழ்வுக்ள் மாணவர்களின் பங்குபற்றுதலுடன் அவரவர் திறமைகள் வளம் பெற வேண்டும். இதில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துத் தெரிவிக்கின்றேன். இதனை இனிதே ஒழுங்கு செய்துள்ள கல்லூரி அதிபர் மற்றும் நிர்வாகிகள், தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நான் பாராட்டுகிறேன், கடந்த பதினேழு வருடங்களாக தொடர்ந்தும் பழைய மாணவர் சங்கத்தில் உபதலைவராகக் கடமையாற்றும் என்னை இவ்விழாவிற்குப் பிரதம அதிதியாக அழைத்தமைக்கு நன்றி கூறுவதோடு பாராட்டுக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**R.** மகேஸ்வரன்
பிரதம நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

உபதலைவர்
புனித சில்வெஸ்ரர் கல்லூரி- பழைய மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE OF THE PRINCIPAL



It is with great pleasure I extend my sincere greetings to the souvenir "Kalai Gnani" being published by the Tamil Cultural Society of our school at the event of staging the "Annual Tamil Kalai Vizha".

I am really proud to give my wishes and blessings to the Tamil Stream since it renders a great service to the school in bringing out the hidden talents of the Tamil speaking students and imparts wholesome education that makes them fully fledged individuals.

I am glad that our school is an exemplary educational institution that supports immensely to mould its students to live a harmonious life in a multicultural society that opens its doors to the students to respect and protect their identities and their own cultural values.

It is obvious that the system of education which is only centered on knowledge will not produce a perfect individual. Both the mind and the heart must be nurtured to nourish and uplift the human culture and art are important.

Therefore, I perfectly feel that "Kalai-Vizha-2022," is a great step to promote the team spirit and brotherhood of all our students. While congratulating the teachers and students of the Tamil stream, I wish "Kalai Vizha -2022 a success."

T.P.G.L.Thennakoon
Principal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பிரிவு உதவி அதிபரின் ஆசிச்செய்தி



என்றன் முன்னை
தீய வினைப் பயன்கள் - இன்னும்
மூளா அழிந்திடுதல் வேண்டும்
இனி என்னைப் புதிய உயிராக்கி
எனக்கேதும் கவலையறச் செய்து
மதி தன்னை மிகத் தெளிவு செய்து
என்றும் சந்தோஷம் கொண்டிருக்கச் செய்வாய்
என்றும் சந்தோஷம் கொண்டிருக்கச் செய்வாய் - (பாரதியார்)

இயற்கையில் அமைந்துள்ள பொருட்களைப் பார்த்தவுடன், நுகர்ந்தவுடன், மனதில் நினைத்தவுடன் நமக்கு இன்பம் வந்துவிடும். அதுபோலத் தமிழைப்பற்றி நினைத்தவுடன் இன்ப உணர்வு மனதிலே தோன்றி விடும். அமுதம் தான் உண்ணும் போது கிடைக்கும் மகிழ்ச்சி தமிழைப் படிக்கும் போது எமக்குக் கிடைக்கிறது.

அவ்வகையில், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட நாம் அம்மொழியை பேணிக் காக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். மலையக மண்ணிலே பிரபல்யம் பெற்று மிளிருகின்ற, எழில் மிகு கண்டி மா நகரிலே, கம்பீரத்தோடு தலை நிமிர்ந்து நிற்கின்றது. "புனித சில்வெஸ்ரர் கல்லூரி" வருடம் தோறும் தமிழன்னைக்கு விழாவெடுப்பது எமது பாரம்பரியம். அவ்வகையில் இவ்வருடமும் நாம் மிகக் கோலாகலமாக கலைவிழா நிகழ்வையும் "கலைஞானி" சஞ்சிகை வெளியீட்டையும் நடாத்துவதையிட்டு பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்வுகளினால் தடைப்பட்டிருந்த எம் கலைவிழா இவ்வருடம் சிறப்பாக நடைபெறுவதை இட்டு மனநிறைவு கொள்கிறேன்.

கலை விழா என்பது தமிழர் பண்பாட்டு பாரம்பரியங்களைப் பறைசாற்றுகின்ற ஒரு நிகழ்வாகும். இதில் தமிழ் மொழித்தினப் போட்டிகள், மாணவர்களின் எழுத்தாற்றல்கள், இயல், இசை, நாடக ஆற்றல்கள், தலைமைத்துவப் பண்புகள், குழு ஒருமைப்பாடு, விழுமியங்கள் என்பன மாணவர்களினால் வெளிக்கொணரப்படுகின்றன. இவ்வாறான துறைகளில் மாணவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதே எம் கல்லூரியின் நோக்கமாகும். இம்முறை நடைபெறும் கலைவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துவதோடு, எம் அடையாளமாக வெளிவரும் கலைஞானி சஞ்சிகை மாணவர்களின் அயரா முயற்சியுடன் சிறந்த ஆக்கங்களை தாங்கி வருவதை இட்டு மனமகிழ்வதோடு, அம்மாணவச் செல்வங்களுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

தமிழ் இலக்கிய மன்றம் வெளியிடும் கலைஞானி சஞ்சிகைக்காக உழைத்த மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், வர்த்தக நிறுவனத்தார், பெற்றோர்கள், அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சஞ்சிகையை சிறப்புற அச்சிட்டு வெளியிட உதவிய DYNAMIC அச்சக உரிமையாளர் திரு.மோகன்லால் அவர்களுக்கும் நிறுவன ஊழியர்களுக்கும் என் நன்றியினை நவில்கின்றேன்.

எம் விழாவை சிறப்புற நடாத்த உதவி, ஒத்தாசைகள், நல்கிய அனைத்துக்கருணை உள்ளங்களுக்கும், மீண்டும் நன்றியை நவில்வதோடு, எதிர்காலத்திலும் எம் மாணவர்களின் முயற்சிகளுக்கு என்றும் உறுதுணையாக இருப்பீர்கள் எனும் நம்பிக்கையுடன் அனைவருக்கும் இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

திரு. V. முரளிதரன்
(தமிழ்ப்பிரிவு – உதவி அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி



அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்.
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
(மகாகவி பாரதி)

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆதலால் இயன்றளவு அப்பணியினைச் செய்வோம்.

மாசற்ற மலையகத் தாய் மடியில் தவள்ந்து, பெரு விருட்சமாய் வளர்ந்து, பல கல்விமான்களால் வார்த்தெடுக்கப்பட்டு கம்பீரத்துடன் தலைநிமிர்ந்து நிற்கின்ற புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் 2022 ஆம் ஆண்டுக்கான கலைவிழாப் பொறுப்பாசிரியர் என்ற வகையிலே, ஆசிச்செய்தி வழங்குவதில் பூரிப்படைகின்றேன்.

அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பிரிவுத் தலைவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நல்வழிகாட்டலுடனும் தன்னிகரற்ற தமிழ் மணம் பரப்பும் கலைவிழா இன்று அரங்கேறுகின்றது. மாணவர்களை சிறந்த ஆற்றலுடைய பிரஜையாக உருவாக்குவதிலே இவ்வாறான விழாக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. மாணவர்களது ஆற்றல்கள், அழகியல் இரசனைகள், திறமைகளை வெளிக்கொணரவும், விருத்தி செய்வதற்கும் ஒரு களமாக கலைவிழாக்கள் அமைகின்றன.

கால நேரம் பாராது, முழு மனத்தோடு, முழு மூச்சாக நின்று கற்றல் செயற்பாடுகளோடு தமது கடமைகளையும், திறமைகளையும் பறைசாற்றும் வகையில் மாணவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்புக்கள் அளப்பரியது.

அதுமட்டுமன்றி எம் மாணவர்களின் அயரா உழைப்பால் உருவாகிய "கலைஞானி" சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் நவில்கின்றேன். மாணவர் முத்துக்களால் முத்தாய் மலர்ந்த முத்தாரமே "கலைஞானி" உனக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதிலே மனம் பூரிக்கின்றேன்.

இவ்விழா சிறப்பாக அமையவும், கலை ஞானி சஞ்சிகை வெளிவரவும் எமக்குப் பக்கபலமாய் நின்ற அனைத்து வர்த்தக உரிமையாளர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், பெற்றோர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் குறிப்பாக இச்சஞ்சிகையை சிறப்பாக வடிவமைத்து உரிய நேரத்தில் வெளியிட உதவிய டைனமிக் நிறுவன உரிமையாளர் திரு.R.மோகன்லால் அவர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

K. ஆனந்தவேல்
பொறுப்பாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவிழா ஒருங்கிணைப்பாளரும் , கனிஷ்ட பிரிவு பகுதித் தலைவி அவர்களின் ஆசிச் செய்தி



"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-
அதை தொழுது படித்திடடிப் பாப்பா" (பாரதியார்)

ஒரு சொற் கேளீர் !
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் ! (பாரதியார்)

மலைச்சாரல் வீச, மலையத்தின் மத்தியிலே, கண்டி மாநகரிலே, இன, மத மொழி-பேதங்களையும் கடந்து, பல்லின கலாசாரத்தைக் தன்னகத்தே கொண்டு 82 வது ஆண்டில் கால் பதிக்கும் "கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரி" கற்றல் - கற்பித்தல்களுக்கு இணையாக இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது

அவ்வகையில் மாணவர்களின் கலைத் திறமைகளை விருத்திச் செய்யும் வகையிலே் கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத்தினரால் இவ்வருடமும் ஏற்பர்டு செய்திருக்கும் கலைவிழா இனிதே சிறப்புற எனது மனமாற வாழ்த்துக்களையும் ஆசிகளையும் நல்குகின்றேன்.

தமிழ் இனிய மொழி. இலக்கிய இலக்கணச் சிறப்புடைய மொழி. தொன்மையான மொழி . இத்தகயை தமிழ் மொழியை வளம்படுத்த வேண்டுமானால் நாம் பாடசாலை மாணவரிடையே மொழி விருத்தியை வளர்க்க வேண்டும். அத்தகைய ஓர் உயரிய பணியினை மேற்கொள்வதற்கு. "கலைஞானி சஞ்சிகை" களமமைத்துக் கொடுத்திருக்கின்றது. இலைமறை காயாக மறைந்து கிடக்கும் ஆற்றல்களை கூட்டுப்பொறுப்புக்களை, ஒழுக்கம், சகிப்புத்தன்மை , புரிந்துணர்வு, நல்லுறவு போன்ற இன்னோரன்ன நற்பண்புகளை வளர்ப்பதற்கு பாடசாலைகளில் நடாத்தப்படும் கலை விழாக்களும், சஞ்சிகை வெளியீடும் உறுதுணையாக அமைகின்றன. மாணவர்களின் அயரா உழைப்பினால் இன்று எம் கைகளில் தவழும் "கலைஞானி" சஞ்சிகை சிறப்புற வாழ்துகளையும் ஆசிகளையும் நல்குகின்றேன்.

திருமதி Y.இராசையா
(விழா. ஒருங்கிணைப்பாளர்
பிரிவுத் தலைவர் -கனிஷ்ட பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து



"பேசாப் பொருளை பேச நான் துணிந்தேன்
கேட்காத வரத்தை கேட்க நான் துணிந்தேன்
மண் மீதுள்ள மக்கள், பறவைகள்
விலங்குகள், பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்புற்று அன்புடன் இணைந்து வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா"

தனக்கு மட்டும்மல்லாமல் உலகிலுள்ள சிறு உயிருக்கும் வேண்டி எழுதிய பாரதியார் வரிகள் இவை, ஒரு பாடசாலையின் போஷாக்கான அபிவிருத்தி கல்வியைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் மட்டுமல்ல தங்கியுள்ள்து. கல்விக்குப் புறம்பான இணைப்பாட விதானச் செயற்பர்டுக்ளிலே பெரிதும் தங்கியுள்ளது. மாணவர் மையக் கல்விக்குத் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற இக்காலக்கட்டத்திலே, அறிவுசார் ஆளுமையோடு உடல். உளம், சார்ந்த் ஆளுமைத் திறன்களையும் வளர்ப்பனவாக கலை விழாக்கள் அமைகின்றன.

அவ்வகையிலே, குறிஞ்சி நகரிலே குன்றாப் புகழுடன் தலைநிமிர்ந்து நிறகின்றது பன்முகக் கல்லூரியான "புனித சில்வெஸ்ரர் கல்லூரி". இன்று எமக்குப் பொன்மயமான நாள். பல சிரமங்களைக் கடந்து உடல், உள ரீதியாக வேதனைப்பட்ட கால் கட்டும் மெல்ல மெல்லக் கடந்து போக, கதிரவன் தன் ஒளிக் கிர்ணங்களை வீச 2022 ஆம் ஆண்டுக்கான கலைவிழாவினை இன்முகத்துடன் வரவேற்கிறது" புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம். இந்த நன்னாளில் "கலைஞானி" சஞ்சிகையின் ஆசிரியர் என்ற பெருமிதத்தோடு, ஆசிச் செய்தி வழங்குவதிலே பெருமிதமும் பூரிப்பும் அடைகிறேன்.

எமது மாணவச் செல்வங்களின் கலையம்சங்களையும், எழுத்தாற்றல்களையும் , எண்ணச் சிதறல்களையும், ஆளுமை விருத்திச் செயற்பாடுகளையும் வெளிக் கொணரச் செய்து பிரகாசிக்கச் செய்யும் நோக்குடன் கலைவிழா நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதது, அத்தோடு காலக் கண்ணாடியின் பிரதி விம்பமாக ஒளி வீசும் "கலைஞானி" சஞ்சிகை தமிழுக்கு வளம் சேர்ப்பதோடு, சமூக, கலாசார பண்பாட்டு அறிவியல் மேம்பாட்டிற்கு உறுதுணையாக நிற்கின்றது என்றால் மிகையாது.

இச்சஞ்சிகை எம் இன்றைய தலைமுறையினரின் புத்தாக்க சிந்தனைகளை, எழுத்துருவில் வெளிக் கொணர்வது மட்டுமன்றி வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமையுமென நம்புகிறேன்.

**S**.சிவநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகைக் குழுவின் எண்ணச் சிதறல்கள்.......



எவனையும் வெற்றுக் காகிதம் என ஒரு போதும் எண்ணாதே.......
ஒரு நாள் அவன் பட்டமாய்ப் பறப்பான்
நீயும் அண்ணாந்து தான் பார்க்க வேண்டும். (பாரதியார்)

மலையருவி சலசலக்கும் எழில்மிகு மலை நாட்டிலே, மலையகத்தின் கண்விழியாய் அமைந்த கண்டி மா நகரிலே, புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் தமிழ்ப்பிரிவுக் கோட்டையிலே உருவெடுத்து வளமான கலை உலகின் விலைமதிப்பற்ற ஆசியுரைகள், கவிதைகள், கட்டுரைகள் என பன்முகப்பட்ட இலக்கிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு, கனியமுதமென வெளிவரும் "கலைஞானி" சஞ்சிகை தங்கள் கரங்களில் தடம் பதிப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நாட்டின் நாற்திசைகளில் இருந்தும் கல்வி கற்க எம் கல்லூரிக்கு வரும் தமிழ் பேசும் மாணவர்கள் தம் கல்வியோடு நின்றுவிடாமல் கலை, இலக்கிய சேவையிலும் பங்கேற்று தம் மன உணர்வுகளையும், ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக்கொணர "கலைஞானி" சஞ்சிகை களமமைத்துக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

மாறிவரும் உலகினிலே மாற்றம் ஒன்று வேண்டும் என்பது அனைவரதும் அபிலாஷையாகும். புதியதொரு தமிழ்ச் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்கோடு "கலைஞானி" சஞ்சிகை உங்கள் உணர்வுகளையும் சிந்தனைகளையும் தொட்டுச் செல்லும் என நம்புகிறோம்.

"கலைஞானி" சஞ்சிகை வெளிவர அயராது தம் உழைப்பை நல்கிய தமிழ்ப்பிரிவு உப அதிபர், விழா ஒருங்கிணைப்பாளர், இதழாசிரியர், மன்றத் தலைவர், இதற்குழு, மாணவர்கள், ஆசிச்செய்திகள் வழங்கிய பெருந்தகைகள் ஆர்வத்துடன் ஆக்கங்களைத் தந்த எம் மாணவச் செல்வங்கள, சஞ்சிகை வெளிவர உவந்து உதவிக்கரம் நீட்டிய வர்த்தகப் பெருந்தகைகள், நலன் விரும்பிகள், கருணை உள்ளம் கொண்ட பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இருகரம் கூப்பி எம் நன்றிகளை நவில்கின்றோம்.

இச்சஞ்சிகையை வடிவமைத்துத் தந்து எம்மை கௌரவப்படுத்திய டைனமிக் அச்சக உரிமையாளர் திரு.R.மோகன்லால் உள்ளிட்ட அச்சக ஊழியர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குற்றம் களைந்து குறை பெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க குறையிருப்பின் பெரும் மனதோடு பொறுத்தருள வேண்டுகின்றோம்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

"தேங்கிக் கிடக்கும் குட்டைதான்
கல்லெறிந்தால் கலங்கும்
ஓடும் நதி கலங்குவதில்லை
இயங்கிக் கொண்டே இரு
எந்தச் சோதனையும்
உன்னை ஒன்றும்
செய்ய முடியாது"

சஞ்சிகைக் குழு
திரு. V. முரளிதரன்
திருமதி. K. கங்காதரன்
திருமதி. S.M. மெட்டில்டா
திருமதி. J. திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத் தலைவரின் ஆசிச் செய்தி



மனிதன் தனது எண்ணங்கள், சிந்தனைகள், உணர்ச்சிகள், தீர்வுகள் என்பவற்றை உருவாக்கவும் பிறருக்கு விளக்கவும், பரிமாற்றுவதற்கும் உபயோகிக்கும் ஓர் ஊடகமே மொழி! அவ் வகையிலே தனித் தன்மைகளையும் சிறப்புக்களையும் கொண்டது நம் தீந்தமிழ் மொழி. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" (பாரதியார்)

அந்த வகையிலே தமிழனின் கலாசார விழுமியங்களை பறைசாற்றுவதாகவும் எமது கல்லூரியின் தமிழ் மாணவர்களின் பன்முகத் திறன்களின் எடுத்துக்காட்டாகவும் விளங்கும் எமது "கலைவிழா 22" இல் கல்லூரியின் ஆதரவாலும் தமிழ் இலக்கிய மன்றத்தினரின் அயராத உழைப்பினாலும் உருவெடுத்த கலைவிழாவின் மணிமகுடமான "கலைஞானி" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

பல தடைகள் காணப்பட்டாலும் அவை அனைத்தையும் உடைத்தெறிந்து எமது கைகளிலே "கலைஞானி" சஞ்சிகை தவழ்வதற்கு உதவி செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, "கலை விழா 22" சிறப்புற நடந்தேற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்"

**C.** அரவிந்த்

**13T** வர்த்தக பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவச் செயலாளரின் ஆசிச் செய்தி



"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து வலம் வரும் எம்
தமிழ் மொழி"

கம்பீரமான தமது கல்விசார் பணியினை செவ்வனே ஆற்றி 82ம் அகவையில் கால் தடம் பதித்திருக்கும் கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் உருவெடுத்த இக்கலை விழாவின் மணிமகுடமாக திகழும் "கலைஞானி" இதழுக்கு மன்ற மாணவச் செயலாளர் என்ற வகையில் ஆசி செய்தி வழங்குவதில் மனம் மகிழ்கின்றேன்.

முத்தமிழான இயல், இசை, நாடகம் என்பவற்றிலும் கல்வி, ஒழுக்கம் போன்ற பல தரப்பட்ட துறைகளிலும் எமது பாடசாலை முன்னேற உதவிய மாணவர்களின் கலைத்துறை சார் திறமைகளுக்கு முன்னுரிமை அளித்து தமிழையும் தமிழர்தம் பண்பாட்டையும் வளர்க்கும் முகமாகக் கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றமானது பெருமையுடன் இணைந்து வழங்கும் "கலைவிழா 22" வான் உயர புகழ் கொண்டு சுடர் விட்டு மிளிரவும், செவ்வனே ஈடேறவும் இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு உதவிகளை வழங்கிய அனைவருக்கும் அகம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**C.**சதுர்ஷன்
**13T** வர்த்தக பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ இதழாசிரியரின் அகத்திலிருந்து...............



"நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பரியாச் சொல்."

என்ற தெய்வப்புலவரின் கூற்றுக்கு இணங்க கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரயின் தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் வழங்கும் "கலைஞானி" இதழின் இதழாசிரியர் என்ற வயைில் ஆசிச்செய்தி வழங்குவதிலே பெருமகிழ்ச்சியடைகின்றறேன்.

"கனியிடை ஏறிய சுவையும்
முற்றல் களையிடை ஏறிய சாறும்
மனிமலர் ஏறியதேனும் காய்த்து பாகிடை-ஏறிய
சுவையும் நனிப்பசு பொழியும் பாலும் தென்னை
நல்கிடும் குளிரிளநீரும் இனியன என்பேன்
தமிழை என் உயிரென்பேன் கண்டீர்"

என்ற சிறப்பையும் இலக்கண இலக்கிய செழுமையும் இளமையும் இனிமையும் கொண்ட எம் தமிழ்மொழிக்கு விழா எடுப்பதில் பெருமகிழச்சியடைகின்றோம். இவ்விழாவில் மனிமகுடமாய் அமையும் எமது "கலைஞானி" சஞ்சிகை எமது மாணவர்களின் மொழிதிறனை வளர்ப்பதற்கும், அவர்களின் எழத்தாற்றலை மேம்படுத்தவும் "கலைஞானி" இதழ் களமமைத்து கொடுக்கிறதென்றால் மிகையாகாது.

எமது கலைவிழா சிறப்புற நடைபெறவும் எமது இதழ் வெளிவரவும் எமக்கு துணையாக இருந்து வழிகாட்டிய அனைவருக்கும் எனது நன்றிகள்.

**B**.தனுஷன்-
**13T** வர்த்தகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ பொருளாளரின் அகத்திலிருந்து.........



"எதிராக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்"

கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் கொண்டாடும் கலைவிழாவிலே வெளிவரும் "கலைஞானி" இதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதிலே பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பொதுவாக படைப்பாற்றல் உணர்வை மாணவ பருவத்திலிருந்தே ஊக்குவிக்கப்படுவது சிறந்ததாகும். படைப்பார்வம் உள்ள இளம் சந்ததியினர் தாமகவே தமது ஆற்றல்களை வெளிப்படுத்த முனைவர் என்பது உண்மையே. ஆசிரியர், பெற்றோர்களின் உக்குவிப்பு அவர்களின் ஆற்றல்களை மென்மேலும் வளர்ப்பதற்கு துணை செய்யும் அந்த வகையிலேயே ஆற்றல்களை மனதுக்குள்ளே புதைத்து கொண்டு அவற்றை வெளிப்படுத்த தயங்கிய மாணர்வர்களுக்கு, தமது படைப்பாற்றலை வெளிப்படுத்த களமமைத்து கொடுத்திருக்கிறது "கலைஞானி" சஞ்சிகை என்றால் மிகையாகாது.

தமிழ் இலக்கியமன்றம் இப் புனித பணிக்கு உளம் நிறைந்த அன்போடு, உதவிக்கரம் நீட்டிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**S.M.**சஹாத்
**13T** கலைப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மன்ற ஆசிரியர் குழு



முன்வரிசை:
திருமதி.K. கங்காதரன், திருமதி. Y. இராசையா, திரு. S. சிவநேசன், திரு.V. முரளிதரன் (உதவி அதிபர்), திரு. T.P.G.L. தென்னகோன் (அதிபர்), திரு. K. ஆனந்தவேல், திருமதி. S. சரோஜினி, திருமதி. D. தர்ஷினி, திருமதி. S. சுமதி.

இடமிருந்து வலம்:
திருமதி. M. மேரி லில்லி, திருமதி. ரிஹானா, திருமதி. M. லோஷினி, திருமதி. லக்ஷ்மி, திருமதி. D. விஜயபாரதி, திருமதி. M. மனோகரன், திருமதி. யாழினி, திரு. G. சசிகுமார், திரு. இலியாஸ், திரு. D. திருவாசகம், திரு. V. நவநீதன், திரு. பிரேம்குமார், திருமதி. Y. செந்தினி, திருமதி. M. சிசில்குமாரி, திருமதி. S.M. மெற்றில்டா, திருமதி. K. சுமதி, திரு. J.R.A. ஜோர்ஜ், திருமதி. S. கஜாந்தினி, திருமதி. K. சந்திரகலா, திருமதி. J. திருச்செல்வம், திருமதி. Z. ஹலீமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலை விழா - 2022
## தமிழ் மொழித்தின போட்டிகள் பரிசளிப்பு

### தரம் 1

கதைக் கூறல்
(1) S.M சோஜோ
(2) M.R.ருமான்
(3) S. சந்தீப் ரொஷான்

பாடல்
(1) D.சதுர்ஷன்
(2) K. தனுஷ்
(3) P.ரிஷிபிரசாந்த
(3) M. அன்சாப்

வாசிப்பு
(1) M. சாஹில்
(2) M.A ஆதம்
(3) H.M. அமர் நெஹான்

### தரம் 2

கதைக்கூறல்
(1) P.சஸ்வின்
(2) S.சபிக்ஷன்
(3) N.GM.M அக்னப்
(3) M.கேஷவர்த்தனன்

பாடல்
(1) M.H.M ஆதில்
(2) P.சவிஸ்கர்
(3) G. ருத்வி
(3) S.பவிஷன்

கட்டுரை
(1) S.வர்ஷந்த்
(2) S.அபிஷன்
(3) N.விகேஷ் கீத்
(3) M.L.M ஆகிப்

### தரம் 3

பேச்சு
(1) M.J.H மொஹமட் ஆசிக்
(2) K. கிங் மெத்யு
(3) M.M. உமர்
(3) S.திசான் சைலேஸ்

பாவோதல்
(1) S. ஸ்ரீவர்ஷன்
(2) T. ஹஸின்தன்
(3) S. மின்னேஸ்வரன்
(3) S. கிளேரன்ஸ்

கட்டுரை
(1) M.S. அயான்
(2) M.F.M அரீப்
(3) P அஸ்வின்
(4) M.M.ஆதிப் அஹமட்

### தரம் 4

பேச்சு
(1) S.திர்ஷான்
(2) S.ரிஜித்
(2) M.I.M. அம்ஹர்
(3) M.A. ஆசில்

பாவோதல்
(1) J.கிரிஷ் யாதவ்
(2) D.ருலக்ஷன்
(3) Z.H.அபீப்
(3) K.A. சந்தோஷ்

கட்டுரை
(1) M.நிதுஜன்
(2) S.தருன் தக்ஷயன்
(3) S.மிதுர்ஷன்

### தரம் 5

பேச்சு
(1) R.K.N ரசீட்
(2) M.கனீஷ்க்
(3) M.R.M. ரைய்யான்

பாவோதல்
(1) K..தருண் ஏட்றியன்
(2) K. லேஷாந்த்
(3) M.N.M.முகர்ரம்

கட்டுரை
(1) S. நிக்கேஸ்
(2) R. மிதுர்ஷன்
(3) M.F.A.ஆதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலை விழா - 2022
# தமிழ் மொழித்தின போட்டிகள் பரிசளிப்பு

### தரம் 6

பேச்சு
(1) S .மயூரதன்
(2) S.மித்ரேஷ்
(3) S.ரித்தூஸ்

கட்டுரை
(1) N.கிர்த்தீஸ்
(2) M.A. யூனுஸ்
(3) G. லோஷிதன்

கவிதை
(1) R. ஜெகதிஷ்
(2) S. அஸ்வின்
(3) R. அபிலாஷ்

### தரம் 7

பேச்சு
(1) K.ஹர்ஷான்த்
(2) Z.H.ஹானிம்
(3) D.ஷரூன்

கட்டுரை
(1) A. பிரகாஷ்
(2) S. மிதுர்ஷன்
(3) Y. ரிந்தேஷ்

### தரம் 8

பேச்சு
(1) S. .சிஹர்ஜிதன்
(2) R.வனிஸ்கன்
(3) Z.F.M.அம்ஹர்

கட்டுரை
(1) M.M.மிஷால்
(2) M.F. ஹாதி ஹுசைன்
(3) M.M. முபீஸ் அக்மல்

கவிதை
(1) M.H. ஹிமாத்
(2) H.M. அனீக்
(3) S. கவிஸ்விந்த்

### தரம் 9

பேச்சு
(1) M.R.M.ரஸீன்
(2) D.கிருத்திக்
(3) Z.H.அஹ்ரார்

கட்டுரை
(1) M.H.M. ஹனான்
(2) K.M. யூசுப் காமில்
(3) R. ஹிரேஷ்

கவிதை
(1) J.M.F.M.ஜார்த்
(2) R.பிரவீன்
(3) A.M. ஆதீப்

### தரம் 10

பேச்சு
(1) L. கிதுர்ஷன்
(2) M.கீர்த்திகன்
(3) T.மதுஷான்

கட்டுரை
(1) S. ரக்ஷிகன்
(2) M.R.M. மஹ்தி
(2) S. திவாகர்
(3) S. சர்வேஷ்
(3) Y.வினோதன்

கவிதை
(1) R. கபிலாஷன்
(2) S. திவாகரன்
(3) P. ஷோபன்

### தரம் 11

பேச்சு
(1) K.லக்ஷான்
(2) J.நந்தேஷ்

கவிதை
(1) K. சபினாஷ்
(2) T. யுகலக்சிதன்
(3) C.லவன்

கட்டுரை
(1) K.ஹரிபிரதாப்
(2) T. யுகலக்சிதன்
(3) K.சபினாஷ்
(3) A.அஷ்வின்

தனிநடிப்பு
(1) R.கபீஷ்கரன்

பாவோதல்
(1) T. யுகலக்சிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலை விழா - 2022
## தமிழ் மொழித்தின போட்டிகள் பரிசளிப்பு

**தரம் 12**

**விஞ்ஞானப் பிரிவு**

கட்டுரை
(1) V. சாருக்ஷபவன்
(2) D. தவரூபன்

**தரம் 12**

**கலைப்பிரிவு**

அறிவிப்பாளர்
(1) P. சஞ்ஜய்
(2) M.R.அப்துல் ரஹ்மான்
(3) J.துஷாந்தன்

பேச்சு
(1) R.கஜன்
(2) S. சுஜேந்திரன்
(3) M.R.அப்துல் ரஹ்மான்

கட்டுரை
(1) N. நிதுர்ஷன்
(2) R.கஜன்

கவிதை
(1) R.கிரிஷாந்தன்
(2) S. சுஜேந்திரன்
(3) P.சாம்கிரேசன்

சிறுகதை
(1) M.N.A.மகீம்
(2) P.பிரசன்னசுதன்
(3) T.துஷ்யந்தன்

இலக்கிய விமர்சனம்
(1) அப்துல் ரஹ்மான்
(2) C.டிலுக்ஷன்
(3) M.S.M.சுலைமான்
(3) M.S.M.சுஹைல்

திறனாய்வு
(1) R.கஜன்
(2) B.ரினோஷன்
(3) T.யுகன்

**தரம் 12**

**கணிதப் பிரிவு**

(1) K..லதுர்ஷன்
(2) A.M. அஷ்பாக்
(3) K. சஞ்ஜேய்

**தரம் 12**

**வணிகப் பிரிவு**

அறிவிப்பாளர்
(1) R.சசிதரன்
(2) R. பிரஷாந்த்
(3) S. அகிலதிவாகரன்

பேச்சு
(1) Y.நவீன்நாத்
(2) M.M. முன்ஷிப்

கட்டுரை
(1) T.லிலாந்தன்
(2) D. அன்றிவ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலை விழா - 2022
# தமிழ் மொழித்தின போட்டிகள் பரிசளிப்பு

**தரம் 13**

**கலைப்பிரிவு**

கட்டுரை
(1) P.ஸ்ரீகாந்த்

பேச்சு
1. P.ஸ்ரீகாந்த்
2. R.திலீபன்
3. M.S.M.சஹ்றாத் ஷரீப்

அறிவிப்பாளர்
(1) M.S.M.சஹ்றாத் ஷரீப்
(2) R.திலீபன்
(3) R.ஓஷன்

**தரம் 13**

**வணிகப்பிரிவு**

அறிவிப்பாளர்
(1) J.தருண்

இலக்கிய விமர்சனம்
(1) C.சதுர்ஷன்
(2) R.விமலேஷ்

கட்டுரை
(1) T.லிலாந்தன்
(2) D.அன்றிவ்சன்

விவாதம்
(1) J.தருண்
(2) C.சதுர்ஷன்
(3) N.யனிஷ்காந்த்

**தரம் 13**

**விஞ்ஞானப்பிரிவு**

அறிவிப்பாளர்
(1) K.உதேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் சிறப்பு

செல்வங்களுள் சிறநத செல்வம் கல்விச் செல்வம். அது ஈடு இணையிலாச் செல்வம். அதனால் தான் வள்ளுவர் "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்றார். கெடுதல் அல்ல அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருள். கல்வி அழிவில்லாதது மட்டுமல்ல: என்றும் நிலைத்து நிற்கக்கூடியது.

பிற செல்வங்கள் அழிந்து விடக்கூடியவை. ஒருவரிடமுள்ள கல்வி வெள்ளத்தினால் அழியாது. நெருப்பினால் வேகாது. கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாது. கல்வி கொடுக்கக் கொடுக்கக் கூடும். கல்வி சிறப்புடையது. கல்வி கற்றவரும் சிறப்புடையவர்.

மன்னனுக்கு தனது தேசத்தில் மட்டுமே சிறப்பு கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. எனவே மன்னனைவிட கற்றவரே சிறப்புடையவர். ஆகவே எல்லா செல்வங்களையும் விட கல்விச் செல்வமே உயர்ந்தது.

சி.மிதுர்ஷன் - **4T**

## கல்வி

கல்வி அழியாத செல்வமாகும். ஏனைய செல்வங்கள் யாவும் பிறருக்கு கொடுக்க கொடுக்க குறைந்துக் கொண்டே செல்லும். கல்விச் செல்வம் பிறருக்குக் கொடுக்க கொடுக்க பெருகிக் கொண்டே செல்லும். இதனாற் தான் கல்வி செல்வத்தை அழியாச் செல்வம் என்று கூறுகின்றனர். கல்வியின் சிறப்புப் பற்றி பல புலவர்கள் போற்றிப் பாடியுள்ளனர்.

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, மன்னனுக்கு தன் தேசமல்லால் சிறப்பில்லை : எனவே மன்னனிற் கற்றான் சிறப்புடையன் என்கிறார் ஔவையார். "கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்றதுணை" என்று சிறப்பித்து கூறுகிறது நீதிநெறி.

கல்வி போல் மம்மர் அறுக்கும் அறுமருந்து உலகில் வேறேதுவும் இல்லை என்கிறார். கல்வி வெள்ளத்தால் அழியாது, வெந்தணழால் வேகாது, கள்வரால் கவரபடமாட்டாது, இம்மையிலும் மறுமையிலும் பயன் அளிக்க வல்லது. இழத்தல் என்பது இல்லை.

பொருட் செல்வமானது பகைவராலும் மன்னராலும் கவரக் கூடியது. எனவே அழிவு இல்லாத செல்வம் கல்வி ஒன்றே ஆகும். என்ற உண்மையை உணர்ந்து நாம் கற்றிட வேண்டும்.

**R.** டிலக்ஷன் - **7T**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியின் தனித்தன்மை

இந்த பூமியில் வாழ்கின்ற உயிரினங்களில் மொழியைப் பயன்படுத்தும் ஒரே ஒரு உயிரினம் மனிதன். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உணர்வுகளையும் கருத்துக்களையும் பகிர்ந்துக் கொள்ள மொழி அவசியமாகும். இடையர் மற்றும் வேடர் யுகத்தில் வாழ்ந்த ஆதி மனிதன் ஒலியெழுப்புவதன் மூலமும் அதன் பின்னர் வாழ்ந்த மனிதன் சைகை மூலமும் தனது கருத்துக்களை பரிமாறினான். பின்பு அந்த சைகை மொழிக்கு ஒலி வடிவம் கொடுப்பதன் மூலம் உருவான மொழியானது படிப்படியாக வளர்ச்சியடைந்து, இன்றைய நவீன யுகத்தில் ஏறத்தாழ 7000 இற்கு மேற்பட்ட மொழிகள் உலகெங்கிலும் பரவலாக பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் பபிலோனிய மொழி, கிரேக்க மொழி மற்றும் தமிழ் மொழி ஆகியன தொன்மை வாய்ந்தனவையாக கருதப்படுகின்றது. இவற்றுள் தமிழ்மொழியானது மிகவும் தனித்தன்மையானது இதை பற்றி இக்கட்டுரையில் பார்க்கலாம்.

உலகில் வாழ்கின்ற கோடிக்கணக்கான தமிழர்களின் தாய்மொழியாக விளங்குகின்ற தமிழானது குமரிக் கண்டத்தில் தோற்றம் பெற்றதாக நம்பப்படுகின்றது. பிற்காலத்தில் குமரிக்கண்டமானது நீரில் மூழ்கி அழிவடைந்து போனாலும், அதன் எஞ்சியிருந்த நிலப்பரப்புக்களில் வாழ்ந்த தமிழர்கள் கடல் கடந்து அண்மிய நாடுகளுக்கு சென்று அங்கு தமிழின் புகழைப் பரப்பினார்கள். இவ்வாறு தமிழானது பல்வேறு ஆண்டுகளாக படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றைய நவீன வடிவத்தை எட்டியுள்ளது. தமிழின் பெருமையை புராணங்கள் "கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றி பிறந்த மூத்தகுடி" என்று தமிழரை குறிப்பிடுவதினூடாக இந்த உலகம் தோற்றம் பெற்ற போதே தமிழும் தோன்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழானது பல்வேறு சிறப்புக்களையும் தன்மையையும், தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழர்களின் தாய்மொழியாக விளங்குகின்ற. தமிழானது குமிரிக்கண்டத்தில் தோற்றம் பெற்றதாக நம்பப்படுகின்றது. பிற்காலத்தில் குமரிக்கண்டமானது நீரில் மூழ்கி அழிவடைந்து போனதால், அதன் ஏஞ்சியிருந்த நிலப்பரப்புகளில் வாழ்ந்த தமிழர்கள் கடல் கடந்து அண்மிய நாடுகளுக்கு சென்று அங்கு தமிழின் புகழைப் பார்கின்றார்கள். இவ்வாறு தமிழானது பல்வேறு ஆண்டுகளாக படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றைய நவீன வடிவத்தை எட்டியுள்ளது. தமிழின் பெருமையை புராணங்கள் "கல்தோன்றி மண்தோன்றா காலத்தை வாளோடு முன்தோன்றி பிறந்த மூத்தகுடி." என்று தமிழரை குறிப்பிடுவதினூடாக இந்த உலகம் தோற்றம் பெற்றபோதே தமிழும் தோன்றியதாக குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழானது பல்வேறு சிறப்புகளையும் தன்மையையும் தன்னத்தே கொண்டுள்ளது. தமிழர்களின் தாய்மொழியாக விளங்குகின்ற தமிழ் மொழியின் சிறப்பு ஆதிகாலம் தொட்டு இன்றுவரை இல்க்கியங்கள் ஊடாக அறிஞர்களும் புலவர்களும் எடுத்தியம்புகின்றனர் மொழிகளின் மூத்தமொழியாகிய தமிழ்மொழியின் சிறப்புக்களை போற்றிப் பாடியுள்ள புலவர்களுள் பாரதியார். பாவேந்தர், மற்றும் திருவள்ளுவர் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

மக்களின் எழுச்சி கவிஞனனான போற்றப்படுகின்ற பாரதியார் "யாமறிந்து மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும் "சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா: என்றும் கூறியுள்ளார். அதாவது மொழிகளிலே் தமிழ்மொழிபோல் இனிமையான மொழி இவ்வுலகில் இல்லை அத்தகைய பெருமை வாய்ந்த தமிழை போற்றித் தொழுது கற்கும்படி அறிவுறுத்துகின்றனர், அத்துடன் "தமிழுக்கு அமுதென்று பேர் அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழானது தமிழ் பேசும் மக்களின் உயிர் மூச்சு என தமிழை பெருமைப்படுத்துகின்றனர். பெரும் புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட காவியமான இராமாயணத்தில் தமிழ் மொழியினை "மதுரமான மொழி" என கம்பர் அவர்கள் கூறியுள்ளார்.

தமிழ் மொழியானது மொத்தமாக 247 எழுத்துக்களை கொண்டுள்ளது. அந்த எழுத்துக்கள், உயிர் எழுத்துக்கள், வல்லினம், இடையினம், மெல்லினம் என பலவகையாக பிரிக்கப்பட்டுள்ளன. படிப்பதற்கும் பேசுவதற்கும் எளிமையானது, இனிமையானதுமான மொழியும் இதுவே. இவ்வாறு தமிழின் பெருமையை கூறக்கூற வற்றாத நதி போலத் தோன்றிக் கொண்டே இருக்கும். அத்தகைய சிறப்புத் தொன்மையும் கொண்டது தமிழ் மொழியாகும். தமிழர்களிற்கு உயிராகவும், உயிர்மூச்சாகவும் விளங்கும் தழிழானது, இன்று தமிழ் பேசும் அளவிறகு என கருதும் அளவிற்கு அழிவடைந்து வருகின்றது. பிறமொழியின் மீதான மோகமும் கலாசார மாற்றங்களும் தமிழை இரண்டாம் மொழியாக கருதுவதற்கும் உறுதுணையாக அமைகின்றதது.

தமிழர்களின் பாரம்பரியமான கலாசாரமானது தமிழ்மொழியை அடிப்படையாக வைத்தே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆகவே தமிழ்மொழியின் அழிவானது தமிழ் கலாசாரத்தின் இருப்பையே கேள்வி குறியாக்கிவிடும், எனவே தமிழ்மொழியை பாதுகாப்பது அவசியமாகும். இன்றைய நவீன உலகில் ஆங்கில மொழியே அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. ஆங்கில வழிக்கல்வி ஆங்கில மொழியிலான வேலைவாய்ப்புக்கள், அந்நிய வாழ்க்கை முறை மீதான அதீத ஈர்ப்பு போன்றன ஆங்கில மொழிக்கான தேவையை உருவாக்குகின்றன. இதனால் தமிழின் தேவையாது குறைவடைகின்றது. இந்நிலை மாறவேண்டுமாயின் தாய்மொழி கல்வியானது ஊக்குவிக்கப்படுவதோடு. தமிழ் மொழியை சிறுவயது முதலே குழந்தைகளுக்கு பேசக் கற்றுத் தர வேண்டும். உலகில் மிகத் தொன்மையான மொழியாகிய தமிழை பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

உயரிய மொழியாக தமிழைக் காக்க முடிந்தவரை பிறமொழி சொற்களை கலக்காது தூயதமிழில் பேசுவதோடு, தமிழின் அரிய நூல்களை பேணிபாதுகாக்க வேண்டும். "எதிர்வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு: என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டது, போன்று தமிழை நமது வளமாக போற்றி அதன் தனித்தன்மையை காப்போமாக.

T. லிலாந்தன்
**12T** வர்த்தகப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தமிழ் திரைப்படங்களின் போக்கு

விஞ்ஞானம் தந்த வியக்கத்தக்க வாய்ப்புக்கள் பல. அவற்றுள் திரைப்படம் ஒன்று. இன்று மக்களிடையே அதிக செல்வாக்கு பெற்ற சாதனம் ஆக விளங்குவதும் அதுவே மக்கள் தம் உள்ளங்களில் மட்டுமன்றி அவர் தம் வாழ்க்கையிலும் பிரிக்க முடியாத ஓர் அம்சமாக திரைப்படங்களை உருவாகி விட்டது, அன்று தொடக்கம் இன்று வரை திரையரங்குகள் இல்லாத நகரங்களே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திரைப்படம் ஒன்றிற்கு முக்கியமாக படத்தொகுப்பு, ஒளிப்பதிவு, சத்தம், பேச்சு வழக்குகள், முன்வைப்பு போன்றவை முக்கிய அம்சமாக திகழ்கின்றது. சிறந்த இயக்குனர்கள்,. தரமான கதைகள் திரைப்படங்களை வளர்க்க முக்கிய காரணமாக அமைகிறது. அக் காலத்தில் சிறந்த திரைப்படங்களாக "அழியாத கோலங்கள், கல்லுக்குள் ஈரம், பதேத் பாஞ்சாலி" போன்றவை சிறந்த கதைகளை கொண்ட திரைப்படங்களாக திகழ்கின்றது.

சிறந்த இயக்குனர்களுக்கு உதாரணமாக பாண்டியராஜ் போன்ற இயக்குனர்கள் இருப்பதனால்தான் திரைப்படங்கள் வளரச்சிபெற உதவியாக உள்ளன. திரைப்படங்கள் பல வகைப்படும். செய்திப்படம், விளக்கப்படம், அறிவியல்படம், சமூகப்படம் போன்றவை ஆகும்.

பல மன்றங்கள் வைத்து கூறப்படும் ஒரு கருத்தை ஒரு திரைப்படம் மூலமாகவே இலகுவாகவும் விளங்கும் வடிவத்திலும் கூறுவதன் மூலம் மக்கள் திரைப்படங்களை ரசித்து பார்க்க தொடங்கினார்கள். திரைப்படங்களை பெரியோர், சிறியோர், பெற்றோர் பார்க்கின்ற காரணத்தினால் நடை, உடை, பாவனை திரைப்படங்களின் முக்கிய அம்சமாக அமைகிறது. திரைப்படங்கள் பார்ப்பது வெறும் பொழுது போக்கு என்று எடுத்து கொள்ள முடியாது. அதாவது இயக்குனர் சமுதாயத்திற்கு கூற வரும் கருத்தை நாம் விளங்கிக் கொள்வதற்கு நேரத்தை இழக்கின்றோம்.

திரைப்படங்கள் பார்ப்பதன் காரணமாக நன்மைகள் மட்டும் இருக்கின்றது என்று கூற முடியாது. தீமையும் உண்டு. தீமைகளாக நேரம் வீணடிக்கப்படுகிறது. சோம்பல் தனம் ஏற்படும். ஆபாச காட்சிகளை திரையரங்குகளில் பார்ப்பதனால் "குடும்பத்துடன் பார்க்கும் போது எல்லோருக்கும் மனக்கசப்பு ஏற்படும்". சிறுவர்கள் அவ்வாறான காட்சிகளை பாரக்கும் போது அவ்வாறான எண்ணங்கள் தோன்றும். நடை, உடை பாவனை மூலமாக மக்களுக்கு அவ்வாறான கலாசாரத்திற்கு உருவாவதற்கு முக்கிய பங்களிப்பாக அமைகிறது. அது மட்டுமல்லாது திரைப்படங்களில் தமக்கு பிடித்த கதாபாத்திரத்தை நடைமுறை வாழக்கைக்கு உட்படுத்துவது ஒரு விடயமாகும்.

தற்கால திரைப்படங்களில் இயக்குனர்கள் பணம் சம்பாதிக்கின்ற நோக்கத்தின் காரணமாகவே ஆபாச காட்சிகள், அறை குறை உடைகள் போன்ற ஆடைகளை பயன்படுத்தி திரைப்படங்களை வீண்படுத்துகின்றனர். திரையுலகிற்காக பல இயங்குனர்கள் முன் அனுபவம் இல்லாமலும் , பணம் அதிகமாக இருப்பதாலும் திரைப்படங்களை இயக்கி திரைப்படங்களை பார்க்கும் எல்லோரின் நேரத்தையும் வீண்படுத்துகின்றனர்

தற்கால திரைப்படங்கள் நன்மைகளாக புதிய இயக்குனர்கள் சிறு படங்களை எடுத்து முன்அனுபவத்துடன் திரையுலகிற்கு வந்து சிறப்பான கலைப்படங்களை உருவாக்கி மக்களிடம் சேர்ப்பது குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் நவீன வளர்ச்சி காரணமாக திரைப்படங்களை அழகுப்படுத்துவதற்காக (EDITING) படத்தொகுப்பை கவர்ச்சி மூலம் வடிவமைக்கின்றனர். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக திரைப்படங்கள் மக்களை கவரும் விதத்தில் அமைகிறது. திரைப்படங்களில் கதை மட்டுமல்லாது பாடல்களும் இருப்பதனால் இசையை ஆதரிப்பவரும் இவ்வாறான திரைப்படங்களை இரசித்து பார்க்கின்ற காரணத்தால் திரைப்படம் இன்றும் வளர்ச்சியடைந்தது.

இயக்குனர்கள் பெரிய தொகை பணத்தை செலவழித்து திரைப்படங்களை இயக்குவதாக திரையரங்குகளில் பெரும் மக்களின் வருகை காணப்படும். ஏனென்றால் செலவழிப்புக்கு ஏற்ப கதையமைப்பு காணப்படும் என்ற ஒரு நம்பிக்கையே.!...................... தற்போது நவீன போக்கில் "கமரா, ஒலி, பின்னணி, கணணி" நாட்டில் ஏற்பட்டு வரும் கோவிட்-19 தொற்று நோய் பரவுவதால் திரையரங்குகளில் மக்கள் வருகை தருவது கேள்விக்குறியாகும். சிறப்பான கதை அம்சத்தை உடைய திரைப்படமாக இருந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் திரையரங்களுக்கு வந்து இரசித்து பார்ப்பர்.

**M. Nidhurshan**
**12T** கலைப்பிரிவு

# வாசிப்பின் முக்கியத்துவம்

மனிதனை அறிவுலகிற்கு இழுத்துச் செல்வது புத்தகங்களே. அழிவை மனிதர்களுக்கு எம்மை நல்வழிக்கும் கொண்டு செல்கின்றது. புத்தகங்களே மனிதர்களின் நல்ல நண்பர்கள் . கடவுள் குடிக்கொள்ளும் இடம் கோயில் என்றால் புத்தகங்களே உறையுமிடங்கள். அறிவு திருக்கோயில்கள் என்றும் கூறலாம் என நமது முதாதையர்கள் அன்றே எமக்கு கூறியுள்ளனர். நூல்களை சேகரித்து வைக்கும் அறிவாலயங்கள் மூலமாக நூல்களை இரவலாக பெற்று வாசிக்கும் வாய்ப்பு இருப்பதோடு பணம் கொடுத்து வாங்கி பிரயோசனப்படுத்தி முடியாதவர்களுக்கும் அறிவுத்தானம் வழங்குவதாயிருக்கின்றது. இந்த வகையிலே நூல்களின் பயன்பாடு மூலம் மக்கள் அறிவைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் பற்றி மக்கள் தெளிவாக இருந்தால் கல்வி செழுமையுடன் சமூகம் தானாக உருவாகும்.

இன்று பொதுவாக மக்கள் மத்தியிலும் குறிப்பாக இளைய தலைமுறையினராகிய மாணவர் மத்தியிலும் நூலகப் பாவனைக் குறைவடைந்து வருகின்றது. இது ஆரோக்கியமானதல்ல. மாணவர்கள் மத்தியில் வாசிக்கும் திறன் அதிகரிக்கும் போது தான் அறிவு வழி பெருக்கெடுத்து வாசிப்பின் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்து கொள்வார்கள். அவர்தம் கல்வியும் செழிப்பெடுத்து வளரும். ஒருவன் நூலகங்களைப் போல நிறைய புத்தகங்களை வைத்துக் கொண்டிருப்பதால் எந்தப் பயனுமில்லை. அவற்றை வாசித்து உள்வாங்கிக் கொள்வதனாலேயே அறிவாளி ஆகிறான். ஆனால் இன்றைய காலக்கட்டத்தை பொறுத்த வரையில் நவீன யுகம் என்பதால் மனிதர்கள் பெரிதும் ஊடகங்களை அதிகம் பயன்படுத்துகின்றார்கள். ஆதலால் வாசிப்பின் அருமையும் புத்தகங்களின் பெருமையைப் பற்றி தெரிவது மிக கடினமானதொன்றாக கருதப்படுகின்றது. அன்றைய கால அறிஞர்கள் எழுத்தறிவாளர்கள், பேரறிவளர்கள் போன்றோர் வாசிப்பின் மூலமாகவும் புத்தகங்களின் மூலமாகவும் இன்றைய சமூகத்தினருக்கு அறியவகையில் பலவகையான அறிவைக் கொடுத்து பெரிதும் சாதித்து உள்ளனர். ஊடங்கள் என்ற சூத்திரக்காரன் வராமல் இருந்தால் மனிதர்கள் மத்தியில் புத்தகங்களின் அருமையும் வாசிப்பின் மகத்துவமும் தெரிந்திருக்கும். அன்றைய காலம் பெரியார்கள் வாசிப்பின் முக்கியத்துவத்தை கவிதையினூடாக, பாடல்வரிகளினூடாக, சிறுகதை வடிவமாக இன்னும் பல வழிகளில் வாசிப்பின் முக்கியத்துவத்தை இவ்வுலகுக்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

அதிலும் குறிப்பாக திருவள்ளுவர் "வாசிப்பே மனிதனை பூரணமாக்கும்" என்பதனை மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

